கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 154/2021

வா.சா.1– ராஜலட்சுமி

26–06–2023 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1) எனக்கு சொந்த ஊர் எது என்றால் சென்னை குரோம்பேட்டை. என் தாத்தாவின் பெயர் என்ன என்றால் சீனிவாசன். என் பாட்டி பெயர் என்ன என்றால் கிருஷ்ணவேணி அம்மாள். அவர்களின் வாரிசுதாரர்கள் யார் என எனக்கு தெரியுமா என்றால் கோபாலகிருஷ்ணன், நாச்சியார் ஆகியோர் வாரிசுகள்.

2) கோபாலகிருஷ்ணனுக்கு திருமணமாகி விட்டதா என்றால் ஆகி விட்டது. எந்த வருடம் திருமணம் நடந்தது என்றால் தெரியாது. திருமணம் எங்கு நடந்தது என தெரியுமா என்றால் திருநெல்வேலியில் நடந்தது. என் அத்தை பெயர் என்ன என்றால் வேணி. வா.சா.ஆ.6 ஆவணத்தில் வேணி என்று தான் பெயர் உள்ளது என்றால் சரிதான். வேணி என்று தான் சொல்வோம். கிருஷ்ணவேணி அம்மாள் எந்த வருடம் எங்கு இறந்தார் என்றால் 1999 ம் ஆண்டு சென்னை குரோம்பேட்டையில் இறந்துபோனார். வேணிக்கு குழந்தைகள் பிறந்தார்களா என்றால் இல்லை.

3) என் அம்மா, அப்பா பெயர் என்ன என்றால் சுப்புராஜ், நாச்சியார் அவர்களில் யார் தற்போது உயிருடன் உள்ளார்கள் என்றால் என் அப்பா சுப்புராஜ் உயிருடன் உள்ளார். இறந்துபோன என் அம்மா நாச்சியாருக்கு யார் வாரிசுகள் என்றால் நான், என் அப்பா, என் தம்பி ஆகியோர் வாரிசுகள். என் அம்மா எந்த வருடம் இறந்தார் என்றால் 14.04.1978 அன்று சென்னை சைதாப்பேட்டையில் இறந்து போனார். முதல் விசாரணை வாக்கு மூலத்தில் வா.சா.ஆ.1 தேதி 14.4.1978 என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4) என் அம்மா நாச்சியார் இறந்தபோது 1ம் பிரதிவாதி மாதவனுக்கு என்ன வயது என்றால் 30 நாட்கள். அப்போது என் வயது என்ன என்றால் 3 வயது. என் பிறந்த தேதி என்ன என்றால் 28.11.1975 ஆகும். என் தாயார் இறந்தபிறகு நானும் 1ம் பிரதிவாதியும் யார் பாதுகாப்பில் வளர்ந்து வந்தோம் என்றால் நான் மட்டும் என் வளர்ப்பு தந்தையான தாய்மாமன்

கோவிந்தகிருஷ்ணனிடம் வளர்ந்தேன். 1ம் பிரதிவாதி மாதவன் என் அப்பாவிடம் வளர்ந்து வந்தார்.

5) நான் முதல் விசாரணையில் சொல்லியது போல் என்னை தத்து கொடுத்த விவரத்தை எந்த ஆவணம் மூலம் தெரிந்து கொண்டேன் என்றால் ஆவணத்தை நான் பார்த்தது இல்லை. என் தந்தை சொல்லி உள்ளார். எந்த வயதில் தெரிந்து கொண்டேன் என்றால் தெரியாது. யார் மூலம் தெரிந்து கொண்டேன் என்றால் என் வளர்ப்பு தந்தை மூலம் தெரிந்து கொண்டேன். என்னை தத்து கொடுத்தபோது நான் குழந்தையாக இருந்ததால் என் தந்தை தான் என்னை தத்து கொடுத்தாரா என்று எனக்கு தெரியுமா என்றால் தத்து எடுத்ததாகச் சொன்னார்கள். குழந்தையாக இருந்ததால் அது எனக்கு தெரியாது. என் வளர்ப்பு தந்தை சொல்லி உள்ளார்.

6) என் அம்மா நாச்சியார் இறந்தபிறகு நானும் என் தம்பியும் என் தாத்தா பாதுகாப்பில் வளர்ந்தோம் என்றும் என் தாய்மாமன் எங்களை பள்ளிக்கு அழைத்து செல்வார் என்றால் சரியல்ல. என்னை என் அப்பா என் வளர்ப்பு தந்தையான தாய்மாமாவுக்கு தத்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் குழந்தையாக இருந்தபோது என்னை பள்ளிக்கு அழைத்துச் செல்வது அவர் கடமை என்றால் அவர் வளர்ப்பு தந்தையாக இருந்து எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டார்.

7) என் தந்தை சுப்பாராஜை தாவாவில் சாட்சியாக விசாரிக்க எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். தாவா பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் நான் கோரி உள்ள பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. என்னுடைய தத்து எடுத்த ஆவணத்தை 1ம் பிரதிவாதி திருடிச் சென்றது குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளீர்களா என்றால் ஆமாம். அந்த புகாரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை.

8) புகார் கொடுத்த சமயத்தில் தேர்தல் நடந்தது. புகார் மனு ரசீது தாக்கல் செய்துள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் சித்தம்பலபாக்கம் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு ரசீது அது வா.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.15 ல் என் தம்பி ஆவணங்களை திருடிச் சென்றுவிட்டதாகச்

சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது. தத்து கொடுத்த ஆவணங்களை திருடிச் சென்று விட்டதாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் ஆவணங்கள் எல்லாம் என்று சொல்லப்பட்டுள்ளது.

9) வா.சா.ஆ.15 ல் மனுதாரர் கையொப்பம் என்று உள்ளது உங்களுடையதா என்றால் இல்லை. அது யாருடையது என்றால் தெரியாது. ஆகையால் புகாரை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் தவறு. நான் தான் புகார் கொடுத்தேன். நான் புகார் கொடுக்கவில்லை பொய்யான ஆவணங்கள் தாக்கல் செய்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி ஆவணங்கள் எதையும் திருடிச் செல்லவில்லை நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

10) வேணி இறந்தபோது என் வயது 9 இருக்குமா என்றால் சரிதான். அந்த சமயத்தில் வேணியின் வயது என்ன என்றால் 32 ஆகும். வேணி இறந்த சமயத்தில் என் தாத்தா, பாட்டி உயிருடன் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். வா.சா.ஆ.2 ல் நானும் என் குழந்தைகளும் பள்ளியில் சேர்ப்பதற்காக பெயரை சேர்த்து உள்ளோம் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/-K.R.Kannan
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி(பொறுப்பு)
திருப்பூர்.